# பாரதிய ஜனதா கட்சி

(தலைமை அலுவலகம்)
11, அசோக் சாலை, புது தில்லி-011
தொலைபேசி-011-23005700, ஃபேக்ஸ்-011-23005787

**பாஜக தேசிய செய்தித் தொடர்பாளர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் திரு பிரகாஷ் ஜவேத்கர் புதன்கிழமை, 15 ஜனவரி 2014 அன்று வெளியிட்ட ஊடக அறிக்கை**

ஈ.பி.எஸ் 95 (ஈ.பி.எஸ் ஓய்வூதியம்) திட்டத்தின் கீழ் வழங்கப்படும் குறைந்தபட்சம் ஓய்வூதியத் தொகை ரூபாய் 3,000 என்று நிர்ணயிக்கப்பட வேண்டும் என்று பாஜக கோருகிறது. அரசு நினைப்பதுபோல் இதை ரூபாய் 1000 என்று நிர்ணயித்தால் அது வெறும் அடையாள அரசியலாக இருக்கும் என்பதோடு நாட்டின் உழைக்கும் மக்களுக்கு தீங்கு விளைவிப்பதாகவும் அமையும். இந்த திட்டத்தின் கீழ் குறைந்தபட்ச ஓய்வூதியத் தொகையை ரூபாய் 1,000 என்று நிர்ணயிக்க அரசு பரிசீலித்துவருகிறது என்று வெளியான தகவல்களின் அடிப்படையில் பாஜக இந்தக் கோரிக்கையை முன்வைக்கிறது. இதுவே மிக தாமதமானது குறைவானதுமாகும் என்று பாஜக் விமர்சித்துள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ் பயன்பெற்றுவருபவரும் ஓய்வூதியதாரர்களின் எண்ணிக்கையை 41 லட்சமாகவும் பணியாளர்களின் எண்ணிக்கையை 5 கோடியாகவும் உயர்த்த பாஜக தொடர்ந்து வலியுறுத்திவந்துள்ளது.

குறைந்தபட்ச ஓய்வூதியத் தொகை மாதத்துக்கு ரூபாய் 3000 என்று நிர்ணயிக்கப்பட வேண்டும் என்றும் விலையுர்வுக்கேற்ப அது மாற்றியமைக்கப்பட வேண்டும் என்றும் திரு பிரகாஷ் ஜாவேதகர் மனு வாங்குவதற்கான மாநிலங்களவையின் குழுவிடம் மனுவை தாக்கல் செய்துள்ளார். மனு வாங்குவதற்கான மாநிலங்களைவைக் குழு அனைத்து கோரிக்கைகளையும் ஏற்று முக்கிய கோரிக்கைகளை அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் ஓய்வூதியத் திட்டத்தை மேம்படுத்த வேண்டும் என்றும் பரிந்துரைத்துள்ளது. நாடாளுமன்ற மழைக்காலக் கூட்டத் தொடரில் இந்த அறிக்கை தாக்கல் செய்யப்பட இருக்கிறது. அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுவிட்ட இந்த அறிக்கையை ஏற்பதற்கு பதிலாக அரசு, தொழில்துறை அமைச்சகத்தின் பழைய பரிந்துரையை பரிசீலித்துவருகிறது.

5 கோடிக்கு மேற்பட்ட பணியாளர்கள் தங்கள் ஊதியத்தின் 8.33% தொகையை வருங்கால வைப்பு நிதிக்காக செலுத்திவருகிறார்கள். நிறுவன முதலாளிகள் ஒரு ஊழியரின் ஊதியத்தின் 8.33% தொகையை ஓவூதிய திட்டத்தில் செலுத்துகிறார். ஆனால் 1.16% மட்டுமே ஓய்வூதிய திட்டத்துக்கு அர்சாங்கத்தின் பங்காக வழங்கப்படுகிறது. அரசின் குறைவான பங்களிப்பின் காரணமாக 41 லட்சம் ஓய்வூதியதாரர்களில் 30 லட்சம் பேர் மாதம் ஒன்றுக்கு ரூபாய் 1000த்துக்கும் குறைவான ஓய்வூதியத்தைப் பெறுகிறார்கள். 20 லட்சம் ஓய்வூதியதாரர்கள் ரூபாய் 500க்குக் குறைவான தொகையை ஓய்வூதியமாகப் பெறுகிறார்கள். அரசு தன் பங்களிப்பை 1.16%இலிருந்து வெறும் 1.79%ஆக உயர்த்த பரிசீலித்துவருகிறது. ஓய்வூதியத்துக்கான அரசின் பங்களிப்பு 8.33%ஆக உயர்த்தப்பட வேண்டும் என்று பாஜக கோருகிறது. இதன் மூலம் ஒரு நபர் பெறும் குறியீட்டுடன் இணைக்கப்பட்ட குறைந்தபட்ச ஓய்வூதியத் தொகை ரூபாய் 3000ஆக இருக்கும்

.ஐக்கிய முற்போக்குக் கூட்டணி தொழிலாளர்களுக்கு எதிரான மிக மோசமான அரசாக இருந்துவருகிறது.அவ்வரசு, ஒப்பந்தப் பணியாளர்கள் முறையை

அனுமதித்ததன் மூலம் பணியாளர்கள் சுரண்டப்படுவதை தொடரவிட்டதோடு உழைப்பு மிகத் தீவரமாக தினக் கூலிமயப்படுத்தவப்படுவதையும் அனுமதித்தது. உழைக்கும் மக்களுக்கு பணி-கூலி-சமூகம் சார்ந்த உத்தரவாதத்தை வழங்கும் புதிய கொள்கையை நடைமுறைப்படுத்துவதே பாஜகவின் உறுதியான நிலைப்பாடு

**(பொறியாளர் அருண் குமார் ஜெய்ன்)**
***அலுவலக செயலாளர்***